**வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி – 2017**

---

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் ("வங்கி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வங்கியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் வங்கியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2007 திசெம்பர் 26 இன் 12/2007 ஆம் இலக்க உரிமம் பெற்ற விசேட வங்கிக்கான கூட்டிணைந்த ஆளுகை நெறிப்படுத்தல் | நெறிப்படுத்தலின் 2(3) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் தலைவர் அவரது பதவிக்கான நியமனத்திலிருந்து இலங்கை மத்திய வங்கியிடமிருந்து (சீபீஎஸ்எல்) பொருத்தப்பாடு மற்றும் ஆதன சான்றிதழை பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 திசெம்பர் 04 இல் நடைபெற்ற அதிவிசேட பொதுக் கூட்டத்தில் (ஈஜீஎம்) நிறைவேற்றப்பட்ட தீர்மானம் | வங்கியின் பாங்குதாரரின் உறுப்புரிமைப் பங்குகள் அனைத்தையும் மீண்டும் பொதுத் திறைசேரிக்கு மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் இரண்டு உறுப்புரிமைப் பங்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாற்றப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 690.88 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 707.85 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 16.97 மில்லியன் முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது வட்டி வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 3.2 பெறுமதிச் சேர்க்கை

மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 603 மில்லியனாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான ரூபா 246 மில்லியன் கூட்டுத்தொகையான ஆளணி வேதனங்கள், பெறுமானத்தேய்வு மற்றும் வரிச் செலவினம என்பவற்றை கணக்கிற்கு எடுத்த பின்னர் வங்கியின் பெறுமதி சேர்கையானது 2016 ஆம் ஆண்டில் ரூபா 826 மில்லியனிலிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 849 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், துறை விகிதங்களுடன் சேர்த்து மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் முக்கிய சில விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | துறை விகிதம் | வங்கி | |
|---|---|---|---|
| | 2017 | 2017 | 2016 |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | |
| (i) சராசரி உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) (சதவீதம்) | 19.2 | 11.89 | 13.16 |
| (ii) சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (சதவீதம்) | 1.5 | 6.28 | 6.40 |
| (iii) தேறிய வட்டி எல்லை (சதவீதம்) | 3.2 | 10.38 | 9.40 |
| **மூலதன போதுமை** | | | |
| மூலதன போதுமை - தட்டு I (ஆகக்குறைந்தது 5%) | 12.8 | 94* | 82* |
| **சொத்துக்கள் தரம்** | | | |
| (i) மொத்த செயற்பாடற்ற முற்பணம் {பிறேமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியை (பிஎஸ்டிபீ) உள்ளடக்கி} | 4.3 | 33 | 37.06 |
| (ii) மொத்த செயற்பாடற்ற முற்பணம் (பிஎஸ்டிபீ ஐ தவிர்த்து) | 4.3 | 8.49 | 9.37 |

**திரவத்தன்மை விகிதங்கள்**

| | | | |
|---|---|---|---|
| திரவச் சொத்து விகிதம் (சதவீதம்) | 61.6 | 362* | 126* |

* வங்கியால் இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை பயன்படுத்தி மூலதன போதுமை (தட்டு I) மற்றும் திரவத் தன்மை விகிதங்கள் கணிப்பிடப்பட்டிருந்தன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கியானது துறை விகிதங்களுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 362 சதவீத உயர் திரவத்தன்மை விகிதத்தையும் 2016 ஆம் ஆண்டில் 126 சதவீதமான உயர் திரவத்தன்மை விகிதத்தையும் பேணியிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு பிறேமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி (பிஎஸ்டிபீ) தவிர்ந்த மொத்த செயற்பாடற்ற முற்பண விகிதமானது 8.49 சதவீதமாக இருந்ததுடன் இது 4.3 சதவீத துறை விகிதத்தை விட அதிகமாக இருந்தது. இது முறையே ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில் புனரமைப்பு அதிகாரசபை (ஆர்ஏபிஐஏ) மற்றும் தனிப்பட்ட மற்றும் கூட்டிணைந்த துறை என்பவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களினால் பிரதானமாக காணப்பட்டது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான பிஎஸ்டிபீ உள்ளடங்கலாக மொத்த செயற்பாடற்ற முற்பண விகிதம் 33 சதவீதமாக இருந்தது.

(iii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் துறை விகிதங்களுடன் ஒப்பிடும் போது வங்கியானது உயர் மூலதன போதுமை விகிதத்தை பேணியிருந்தது.

## 3.4 வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 2,121,319,656 தொகையினை கோரி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வெளித் தரப்பினர்களிற்கு எதிராக வங்கியால் தொடரப்பட்ட 103 தீர்க்கப்படாத நீதிமன்ற வழக்குகள் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 வங்கியின் செயலாற்றல்

வங்கியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம், நிதிசார் உதவி மற்றும் சேவைகள் ஏற்பாட்டின் மூலம் செயற்திறனான சுயதொழில் நுண் கைத்தொழில்கள் மற்றும் கிராமிய வேலைகள் உள்ளடங்கலான செயற்பாட்டுப் பரப்பின் ஊடாக வறுமைக்காக நிலைத்திருக்கக்கூடிய வருமானத்தை உருவாக்கும் வாய்ப்புக்கள் மற்றும் உயர் வாழ்க்கைத்தரம் என்பவற்றை இனங்காணுதல், அபிவிருத்தி செய்தல், மேம்படுத்துதல், ஊக்கமளித்தல் மற்றும் துணைபுரிதல் பிரதான நோக்கமாக உள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்தச் சொத்துக்களில் ஏறத்தாழ 60 சதவீதத்தை நிலையான வைப்புக்கள் மற்றும் ஆர்ஈபிஓஎஸ் (Repos) போன்ற வெவ்வேறு கருவிகளில் குறுங்கால முதலீடுகளாக வங்கி பேணியிருந்ததுடன் 31 சதவீதத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்திய கடன்கள் மற்றும் முற்பணங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3 சதவீதம் அதிகரித்திருந்தமையால் வங்கியின் பிரதான நோக்கம் தொடர்பாக வங்கி போதியளவு கவனம் செலுத்தியிருக்காதமையை சுட்டிக்காட்டுகின்றது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | மொத்த சொத்துக்கள் | மொத்த கடன் மற்றும் முற்பணங்கள் | சதவீதம் | மொத்த முதலீடுகள் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % | ரூபா | % |
| 2017 | 9,535,166 | 2,957,368 | 31 | 5,722,837 | 60 |
| 2016 | 9,683,201 | 2,756,196 | 28 | 5,836,304 | 60 |

(ஆ) வங்கியின் அமைப்பு அகவிதியில் குறிப்பிடப்பட்ட மிகுதி நோக்கங்களை அடைந்துகொள்வதில் வங்கி கவனம் செலுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும் ''வங்கிச் செயற்பாடுகள் 04 கிளைகளால் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும் ஒன்றிணைத்தல் முன்மொழிவின் காரணமாக புதிய கிளைகளை திறத்தல், பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் மூலதன செலவினம் போன்றவற்றிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார். ஆகையால் 04 கிளைகளுடாக வங்கிச் செயற்பாடுகள் தொடரப்பட்டு குறுங்கால மறறும் நீண்டகால கருவிகளில் மிகை முதலீடு செய்யப்படுகின்றன.

## 4.2 கூட்டிணைக்கப்பட்ட சமயத்தில் வங்கியின் ஆரம்ப நோக்கங்களுடன் இணங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 மே 24 ஆம் திகதிய பிஈடி/என்டிரீஎவ் ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் 1.3 ஆம் பிரிவின் பிரகாரம், வங்கியானது பிஎஸ்டிபீயின் வைப்பாளர்களுக்கு மீட்சியை வழங்க வேண்டும். அதற்கிணங்க, 2016 மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிஎஸ்டிபீயின் நிலுவையாகவுள்ள பொறுப்புக்கள் முறையே ரூபா 2,172,176,831 மற்றும் ரூபா 1,156,988,570 ஆக இருந்தன. இவ் மீதிகள் 2009 திசெம்பர் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் வங்கியால் செலுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது 1.5 சதவீதம் மற்றும் 50 சதவீதம் மாத்திரமே தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,072,014,982 பிஎஸ்டிபீயின் செயற்பாடற்ற கடன் நிலுவையில் ரூபா 37,763,729 தொகை அல்லது 3 சதவீதம் மாத்திரம் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியால் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் ரூபா 1,035,391,453 ஆக இருந்தது.

## 4.3 வங்கியின் சொத்து அடிப்படையை பகுப்பாய்வு செய்தல்

2013 ஆம் ஆண்டில் வங்கியின் மொத்தச் சொத்து அடிப்படை ரூபா 8,011 மில்லியனாக இருந்த அதே நேரம் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் இது 19 சதவீத வளர்ச்சியினை பிரதிநித்துவப்படுத்தி ரூபா 9,535 மில்லியனாக இருந்தது. எனினும், 2013 ஆம் ஆண்டின் இறுதியளவில் உரிமம் பெற்ற விசேட வங்கித் துறையின் (எல்எஸ்பீஎஸ்) மொத்தச் சொத்து அடிப்படை ரூபா 919,325 மில்லியனாக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் இது 49 சதவீத வளர்ச்சியை பிரதிநித்துவப்படுத்தி ரூபா 1,366,206 மில்லியன் ஆக இருந்தது. அதற்கிணங்க, சொத்து அடிப்படையின் பிரகாரம் வங்கியின் வளர்ச்சி வீதம் கவனத்தில் கொள்ளப்பட்ட காலப்பகுதியின் போது எல்எஸ்பீஎஸ் இன் வளர்ச்சி வீதத்தை விடக் குறைவாக இருந்தது.

## 4.4 வங்கியின் சந்தைப் பங்கு

உரிமம் பெற்ற விசேட வங்கி துறையுடன் (எல்எஸ்பீஎஸ்) ஒப்பிடும் போது சொத்துக்கள் மற்றும் வைப்பு அடிப்படையின் பிரகாரம் வங்கியின் சந்தைப் பங்கு கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | வைப்பு அடிப்படை சந்தைப் பங்கு | சொத்துக்கள் அடிப்படை சந்தைப் பங்கு |
|---|---|---|
| | % | % |
| 2013 | 0.132 | 0.87 |
| 2014 | 0.171 | 0.80 |
| 2015 | 0.122 | 0.83 |
| 2016 | 0.110 | 0.80 |
| 2017 | 0.111 | 0.70 |

அதற்கிணங்க மொத்த வைப்புக்களின் பிரகாரம் வங்கியின் சந்தைப் பங்கு 2013 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது 0.021 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த அதே நேரம் அதே காலப்பகுதியின் போது உரிமம் பெற்ற விசேட வங்கி துறையுடன் ஒப்பிடும் போது சொத்து அடிப்படை சந்தைப் பங்கு 0.17 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

நிதிக்கூற்றுக்களில் கூறப்பட்ட மூலதனத்தின் கீழ் மூலதன நிலுவை ஒதுக்கீடாக ரூபா 2,984,843,702 தொகையை வங்கி வெளிப்படுத்தியிருந்த போதிலும் இம் மூலதனம் தொடர்பில் பங்குகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

### 4.6.1 வங்கிக்கான பிரதான இடர் பரப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் நுண் நிதிப் பிரிவால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வங்கியின் மொத்தக் கடன் கலவையில், 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 1,558 மில்லியன் தொகை அல்லது 37 சதவீதம் நுண் நிதிக் கடன் நிலுவையை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு இது ரூபா 1,311 மில்லியன் அல்லது 34 சதவீதமாக இருந்தது. இவற்றில் ரூபா 829 மில்லியன் அல்லது 53 சதவீதம் மற்றும் ரூபா 687 மில்லியன் அல்லது 52 சதவீதம் முறையே 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 50 மில்லியனை விட நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் அதிகமாக இருந்த ஏழு சமூக அடிப்படையிலான அமைப்புக்களிற்கு (சீபீஓஎஸ்) வழங்கப்பட்டிருந்தன. இது உரிய சீபீஓஎஸ் இடமிருந்து கிடைக்க வேண்டிய ஐந்து கடன்களிற்கு எதிராக 10 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரையிலான வீச்சில் நிலுவை மீதிகளிற்கான பிணைகளை கொண்டிருக்காததன் காரணமாக வங்கிக்கு கருத்தில் கொள்ளக்கூடிய இடரை இது உருவாக்குகின்றது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சிபீஓ இன் பெயர் | 2017 ஆம் ஆண்டில் பிணையால் மேவுகை செய்யப்பட்டவை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவைத் தொகை | |
|---|---|---|---|
| | 2017 | 2017 | 2016 |
| | % | ரூபா | ரூபா |
| வரையறுக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கம் | 102 | 65,458,509 | 79,755,623 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர் சங்கம் | 14 | 164,765,278 | 83,106,944 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர் நலன்புரிச் சங்கம் | - | - | 51,400,000 |
| சரீரம் இலங்கை தேசிய மன்றம் | 10 | 53,431,557 | 54,594,201 |
| பெறென்டின நுண் நிதி நிறுவகம் | 14 | 289,448,706 | 199,282,541 |
| சமூக என்வோ விஷன் அமைப்பு | 36 | 66,950,967 | 58,867,076 |
| வரையறுக்கப்பட்ட ஆர்தவிட இன்ரமீடியரி கம்பனி | 18 | 189,342,827 | 159,822,746 |
| **மொத்தம்** | | **829,397,844** | **686,829,131** |

(ஆ) மேலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவையில் 20 சதவீதம் மற்றும் 17 சதவீதம் முறையே 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 20 மில்லியன் தொடக்கம் ரூபா 50 மில்லியன் வரையான வீச்சிற்கு இடையேயான கடன் நிலுவைகளை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(இ) மேலே (அ மற்றும் ஆ) குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் வங்கியானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 சீபீஓ இற்கு அதனுடைய நுண் நிதியின் நிதிசார் வசதிகளில் ரூபா 1,137,409,354 அல்லது 73 சதவீதத்தை வழங்கியிருந்தது. மேலும் வங்கியானது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 சீபீஓ இற்கு அதனுடைய நுண் நிதியின் நிதிசார் வசதிகளில் ரூபா 909,018,213 அல்லது 69 சதவீதத்தை வழங்கியிருந்தது. சில வாடிக்கையாளர்களில் அதிகமாக தங்கியிருத்தல் வங்கிக்கு உயர் கடன் இடரை உருவாக்குகின்றன.

(ஈ) 2015 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டிருக்காத ஏழு சீபீஓ இடமிருந்து பெறவேண்டிய கடன் தொகை ரூபா 101,826,516 ஆக இருந்தது. இக் கடன் மீதிகளிற்கு எதிராக வங்கிக்கு அறவீட்டுத் தன்மையிலான விடயங்களை உருவாக்குகின்ற எந்தவொரு பிணையையும் இக் கடனாளிகள் வழங்கியிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| சங்கத்தின் பெயர் | நிலுவைத் தொகை |
|---|---|
| | ரூபா |
| திருகோணமலை மாவட்ட காந்தி சேவை சங்கம் | 6,581,558 |
| அல் - குவாறிஸ் சமூக அபிவிருத்தி | 2,777,739 |
| சிறீ றோஹன மரண நிவாரணம் மற்றும் சங்கம் | 1,624,691 |
| வரையறுக்கப்பட்ட எச்ஓபிஈ நுண் நிதிச் சேவைகள் (உத்தரவாத) கம்பனி | 39,373,610 |
| கிழக்கின் ஒளிச்சுடர் சமூக சேவை அமைப்பு | 1,631,045 |

| | |
|---|---|
| சமூக நலன்புரி அபிவிருத்தி அமைப்பு | 1,833,896 |
| மக்கள் பொருளாதார கல்வி அபிவிருத்தி அமைப்பு | 48,003,977 |
| | -------------- |
| **மொத்தம்** | **101,826,516** |
| | ========= |

**4.7 பிரதான செயற்பாடற்ற கடன்கள்**

மீளாய்வாண்டிற்கான வங்கியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில் புனரமைப்பு அதிகாரசபையின் நிலுவைக் கடன் மீதி ரூபா 53,367,652 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 51,756,336 தொகை அல்லது 97 சதவீதம் அத் திகதியில் உள்ளவாறு செயற்பாடற்றதாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

**4.8 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 183 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியானது 116 ஊழியர்களை வேலையில் ஈடுபடுத்தியிருந்தது. அதற்கிணங்க, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 மிகை பதவி நிலைகளும் 67 வெற்றிடங்களும் காணப்பட்டன. சீபீஎஸ்எல் இன் மேற்பார்வை திணைக்களமானது 2017 பெப்ரவரி 23 ஆம் திகதிய அதனுடைய கடிதத்தின் மூலம் வங்கி தொடர்பான முக்கியமான மேற்பார்வை அக்கறையை கருத்தில் கொள்வதன் மூலம் மேலதிக அறிவிப்பு வரை அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் இடைநிறுத்துவதற்கு வங்கிக்கு அறிவுறுத்தியிருந்தது.

(ஆ) 25 நிறைவேற்று மட்ட முகாமைத்துவ பதவிகள் 2015 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக இருந்ததுடன் இது ஒரு உதவிப் பொது முகாமையாளர், 07 பிரதான முகாமையாளர்கள், 03 சிரேஷ்ட முகாமையாளர்கள், 05 முகாமையாளர்கள், ஒரு பிரதி முகாமையாளர் மற்றும் 08 உதவி முகாமையாளர்களின் பதவிகளை உள்ளடக்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. 07 பிரதம முகாமையாளர்களின் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவர்களில் எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. இது வங்கியின் சுமூகமான செயற்பாட்டை பாதகமாக பாதித்திருக்கக்கூடும். முக்கியமாக, சிரேஷ்ட முகாமையாளர், நிதி போன்ற வெற்றிடப் பதவியானது வங்கியின் நிதித் தொழிற்பாடுகள் தாமதமடைவதற்கு தாக்கம் செலுத்தியிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கு 1.3 ஆனது வங்கியுடன் சமுதாய அடிப்படை நிறுவனங்களை (சீபீஓஎஸ்) உட்சேர்த்து விரிவாக்குவதன் மூலம் உலகளாவிய ரீதியில் நுண் நிதி நிறுவன வலையமைப்பு விரிவாக்குதல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டுடன்

ஒப்பிடும் போது 7 சீபீஓ ஐ மாத்திரமே வங்கியால் விரிவாக்க முடிந்திருந்தமையானது 3 சதவீத வளர்ச்சியாக இருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கு 2.1 இன் பிரகாரம் வங்கியானது கிராமிய நகர நடுத்தர மற்றும் குறைந்த வருமானமுடைய மக்களை கவர்ந்துகொள்வதற்காக 2017 ஆம் ஆண்டில் பொருத்தமான புதிய சேமிப்புப் பொருட்களை அபிவிருத்தி செய்வதற்கு வங்கி திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 160 மில்லியன் தேறிய சேமிப்பை அல்லது 17 சதவீத வளர்ச்சியை வங்கியால் அடைந்துகொள்ள முடிந்திருந்தது. மேலும், 2017 ஆம் ஆண்டில் சேமிப்பு உற்பத்திப்பொருட்கள் எதனையும் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

(இ) பிஎஸ்டிபீ கடன் ரூபா 1,035,391,453 செயற்பாடற்ற கடன் மீதியை வங்கி கொண்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அக் கடனை அறவீடு செய்வதற்கு எந்தவொரு இலக்கையும் வங்கி நிர்ணயித்திருக்கவில்லை. மேலும் பிஎஸ்டிபீ சொத்துக்களை வைப்புச் செய்வதன் மூலம் இக் கடன்களை அறவீடு செய்வதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட பின்வரும் இலக்குகள் எதிர்பார்க்கப்பட்டவாறு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| **விடயம்** | **இலக்கு** | **உள்ளபடியான அடைதல்** |
|---|---|---|
| கடன் வழங்கல் மற்றும் குத்தகைக்கு வழங்குதல் என்பவற்றின் அதிகரிப்பு | ரூபா 3.181 பில்லியன் | ரூபா 2.165 பில்லியன் |
| சொத்துக்கள் மீதான திரும்பலை பேணுதல் | 7% | 6.28% |
| வரிக்கு முன்னரான இலாபத்தை பேணுதல் | ரூபா 615.5 மில்லியன் | ரூபா 603.5 மில்லியன் |
| அரசாங்க திறைசேரி உண்டியல் மற்றும் பிணைமுறியின் வீழ்ச்சி | ரூபா 396 மில்லியன் | ரூபா 914 மில்லியன் |
| குத்தகைகள் மற்றும் வாடகைக் கொள்வனவுகளின் அதிகரிப்பு | ரூபா 684 மில்லியன் | ரூபா 515 மில்லியன் |

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் வங்கியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) கடன்கள் மீதான கட்டுப்பாடு | செயற்பாடற்ற கடன்களை குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) வங்கிக் கணக்குகளைப் பேணுதல் | குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான பதிவுசெய்யப்படாத பதிவுகள் குறிப்பிடப்பட்டிருந்தமையால் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| | | வலுவான செயன்முறையை வங்கி அமுல்ப்படுத்த வேண்டும். |
| (இ) | பிஎஸ்டிபீ பொறுப்புக்களை தீர்த்தல் | வங்கியானது நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். |
| (ஈ) | கம்பனிகள் அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் | வருடாந்த பொதுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் கால தேவைப்பாடுகளுடன் வங்கி இணங்குதல். |